<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம்</u>

**<u>PRESENT</u>: Thiru. R.V. Rajakumar, B.L.,**
**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at Srivilliputtur.**

**2026 ம் வருடம் ஜூலை மாதம் 24 ம் தேதி வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 377/2025**
**********

தமிழ்நாடு அரசின் பிரதிநிதி,
துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–II,
சிவகாசி(மு.கூ.பொ). ,,, குற்றமுறையிடுபவர்

///எதிர்///

R. முத்துசாமி ,,, எதிரி

குற்றச்சாட்டு: (1) தொ.ச.பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(q)
உடன் பிரிவு 85(i)
(2) தொ.ச.பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(p)
உடன் பிரிவு 85(i)
மற்றும் உடன்பிரிவு 92 ன் படி

******

இவ்வழக்கு 21.03.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–II, சிவகாசி(மு.கூ.பொ) அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் Thiru. T. Rajaiah, B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள்வரை இந்நீதிமன்ற பரீசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>தீர்ப்புரை</u>

கடந்த 05.10.2024 அன்று பிற்பகல் 02.15 மணியளவில் வாதி ச.எண்.278/2, 279/2, 280/2, 281/2, 282 அயன்கரிசல்குளம் கிராமம், வத்ராப் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள எதிரிக்குச் சொந்தமான 'அன்பு பயர் ஒர்க்ஸ் பேக்டரி' இல் ஆய்வு மேற்கொண்டபோது மேற்படி தொழிற்சாலையில் உலர்மேடை எண்.4(Drying Plat form) யை சுற்றிலும் 2 மீட்டர் தூரத்தில் உலர்மேடையைவிட குறைந்தது ஒரு அடி உயரம் அதிகம் உள்ள தடுப்புச்சுவர்கள்(Blast walls) அமைக்கப்படாமல் இருந்தது கண்டறியப்பட்டது என்றும் அறை எண்.1(Chemical Mixing Shed). அறை எண்.2 (Chemical Filling Shed) ஆகிய அறைகளில் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு ஏதுவாக Work

Benches மற்றும் Table கள் அமைக்கப்படாமல் இருந்தது கண்டறியப்பட்டது என்றும் இவ்வாறாக எதிரியின் செயல்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட தொழிற்சாலைகள் சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 ஆகியவற்றின் படி முரணானது என்றும், எதிரிமீது வாதி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவுகள் **(1)** பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(q) உடன் பிரிவு 85(i) **(2)** பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(p) உடன் பிரிவு 85(i) மற்றும் உடன்பிரிவு 92 ன் படி குற்றம் சாட்டப்பட்டு குற்ற முறையீடு தாக்கல் செய்துள்ளார்.

**புகார்தாரர் ஆஜர். எதிரியின் வழக்குரைஞர் ஆஜரானார்.**

**2**. எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு முறையாக வழங்கி குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவாளிதான் என்று கூறினார்.

3. மேற்படி எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலை கருத்தில் கொண்டு எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 மற்றும் தொழிற்சாலை சட்டப் பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(q) உடன் பிரிவு 85(i) மற்றும் உடன்பிரிவு 92 ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.5,000/– விதித்தும், கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், தொழிற்சாலை சட்டப்பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(p) உடன் பிரிவு 85(i) மற்றும் உடன்பிரிவு 92 ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.5,000/– விதித்தும் உத்தரவிடப்படுகிறது.

மொத்த அபராதத் தொகை = ரூ.10,000/–

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் வெள்ளிக்கிழமை 24 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.07.24 14:05:40 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**திருவில்லிபுத்தூர்.**